**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21.01.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## தேசிய அளவிலான மூன்று நாள் பயிலரங்கு

இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை நிதி உதவியுடன் வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தில் அமைக்கப்பட்ட காலநிலை மற்றும் பேரிடர் நெகிழ்திறன் வேளாண்மைக்கான ஆராய்ச்சி மகத்துவ மையத்தில், "கார்பன் பாதச்சுவடு கண்காணிப்பு: நுண் வாயு மற்றும் பசுமை இல்ல வாயு உமிழ்வுகளை அளவிடுதல்" தொடர்பான தேசிய அளவிலான மூன்று நாள் பயிலரங்கு ஜனவரி 21 முதல் 23, 2026 வரை நடத்தப்படவுள்ளது. 21 ஜனவரி 2026 அன்று, கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (TNAU) வளாகத்தில் இந்தப் பயிலரங்கு தொடக்க விழாவுடன் துவக்கப்பட்டது.

இந்த பயிலரங்கின் நோக்கமானது விவசாயத்தில் பசுமை இல்ல வாயு அளவீடு, கண்காணிப்பு மற்றும் கார்பன் பாதச்சுவடு மதிப்பீட்டுக்கான திறன் மேம்பாட்டை வலுப்படுத்துவதும் ஆகும். தேசிய அளவில் பசுமை இல்ல வாயு உமிழ்வில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து இப்பயிலரங்கில் பங்கேற்க விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர். வெ. கீதாலட்சுமி, பயிர் மேலாண்மை இயக்குநர் முனைவர். எம்.கே. கலாராணி, திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்குநரக இயக்குநர் முனைவர். ப. பாலசுப்ரமணியம், ஆகியோர் குத்துவிளக்கேற்றி இந்நிகழ்ச்சியை தொடங்கி வைத்து, காலநிலைக்கு ஏற்ற நெகிழ்திறன் வேளாண் முறைகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்.

முனைவர். எம்.கே. கலாராணி, அவர்கள் வரவேற்புரை வழங்கி துவங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, முனைவர். ப. பாலசுப்ரமணியம், அவர்கள் காலநிலை மற்றும் பேரிடர் வேளாண் மகத்துவமையத்தை குறித்து சுருக்கமான அறிமுகத்தை வழங்கினார். மேலும், பசுமை இல்ல வாயு கண்காணிப்பில் திறன் மேம்பாட்டின் அவசியத்தையும், விவசாயத்தில் காலநிலை மாற்றச் சவால்களை எதிர்கொள்ள மேம்பட்ட அறிவியல் பயிற்சியின் முக்கிய பங்களிப்பையும் அவர் வலியுறுத்தினார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர். வெ. கீதாலட்சுமி அவர்கள் தொடக்க உரை வழங்கினார். அவர், கார்பன் பாதச்சுவடு தொடர்பான அடிப்படை கருத்துக்களை, அதாவது கார்பன் மூலங்கள், உறைவிடங்கள் (sinks), கார்பன் பட்ஜெட் ஆகியவை குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இப்பயிலரங்கில், தெலுங்கானா, மகாராஷ்டிரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் செயல்பட்டு வரும் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களை சார்ந்த 48 மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பங்கு பெற்றார்கள். வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். நா. க. சதயமூர்த்தி நன்றி நல்கினார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***